**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. C.C. No. 21 /2025**

**Deposition of Witness for Complainant PW1**

**திரு. மனோஜ் த/பெ. போஜன் வயது. 47 ஊர். கண்ணேரிமுக்கு**

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**30.07.2026 Witness Signature :**

**PW1 குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி 12.25 P.M**

1. என்னிடம் காட்டப்படும் சா.பொ.1ல் இரத்தக்கறை எதுவிம் காணப்படவில்லை என்றால் சரிதான். பேண்ட் பாக்கெட்டிற்குள் சா.பொ.1 ஐ எடுத்துக்கொண்டு வரமுடியாது என்று சொன்னால் சரிதான். அவர் எடுத்துக்கொண்டு வந்தது வேறு கல்லாகும். இந்த கல் இல்லை. சா.பொ.2, சா.பொ.3 இரும்புக் கம்பி இல்லை என்று சொன்னால் சரிதான். சான்று பொருட்கள் 1 முதல் 3 வரையானவகைகளை நீதிமன்றத்தில்தான் பார்த்தேன் என்றால் சரிதான். CCTV camera விற்கான ரசீதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். Pendrive ல் இருக்கும் Video வை எதிலிருந்து பதிவு செய்தோம் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. போன வாரத்தில் 3ம் எதிரியின் மாமனார் கொடுத்த செல்போனில் இருந்துதான் Pendrive ல் உள்ள Video வை பதிவு செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எதிரிகள் மூன்று பேரும் மிரட்டினார்கள் என்ற விவரத்தை புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு 05.35 மணிக்கு நாங்கள் வந்ததாக மருத்துவர் கூறியுள்ளார் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்குத் தெரியவில்லை. நான் சென்றது 06.30 மணிக்கு ஆகும்.

இராமகிருஷ்ணா மருத்துவமனையில் 2 அல்லது 3 நபர்கள் அடித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். கோத்தகிரி காவல் நிலையத்தில் வைத்து போலிசார் என்னிடம் எத்தனை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் தற்போது எனக்கு நியாபகமில்லை, ஆனால் கையொப்பம் போட்டேன். இராமகிருஷ்ணா மருத்துவமனையில் வைத்து என்னிடம் போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். பொய்யான புகார் கொடுத்து ஒரு குடும்பத்தை பாழாக்க வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/- G. Amirdham, 30.07.2026
Judicial Magistrate,
Kotagiri